CC 446/2019

12.03.2026

பு.சா.1,

பெயர்: செந்தில்

த/பெ. வெங்கடாச்சலம்

பு.சா.1 சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Both Present.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பு.சா.ஆ.8 ஆவணத்தை மனு தாக்கல் செய்யும்போது எனது தரப்பு சான்றாவணமாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லையென்றால் சரிதான். மேற்படி ஆவணம் கணினியில் பதிவேற்றம் செய்தபின்பு பதிவிறக்கம் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் கடைசி பக்கத்தை எனது கணினியில் இருந்து பதிவிறக்கம் செய்தேன் என்றால் சரியல்ல, மேற்படி பக்கம் பதிவேற்றம் செய்யும்போது எடுக்கப்பட்டது.

எனது கணினியின் மூலம் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். எதிரிக்கு வரமிளகாய் கொடுத்தோம். அன்றைய சூழ்நிலையில் வரமிளகாய்க்கு வரி ஏதும் இல்லை. உள்ளூரில் வர்த்தகம் செய்யும்போது மார்க்கெட் கமிட்டிக்கு வட்டி கட்ட தேவையில்லை. வெளி மாநிலத்திற்கு அனுப்பும்போதுதான் வரி கட்டுவோம், அன்றைய தேதியில் VAT வரி 2 சதவீதம் செலுத்த வேண்டும் என்றால் செலுத்த தேவையில்லை.

பு.சா.ஆ.8 ஆவணத்தின் 6 வது பக்கத்தில் எதிரியின் நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என கூறியுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் 3 வது பக்கத்தின் சி காலத்தில் எதிரியின் நிறுவனத்திற்கு கொடுத்த கணக்கை காண்பித்துள்ளேனா என்றால் சரிதான், படிவத்தில் தனித்தனியாக வர்த்தகம் செய்ததை காண்பிக்க இயலாது, அந்த மாதத்திற்குண்டான மொத்த வர்த்தக தொகையைதான் காண்பிக்க முடியும். மேற்படி ஆவணத்தின் மொத்த தொகையை 4 வது பக்கத்தில் E காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பு.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள 6 வது பக்கம் என்னால் தயாரிக்கப்பட்டது என்றாலும், பொய்யாக தொகையை நிரப்பியுள்ளேன் என்றாலும் சரியல்ல. மேற்படி ஆவணத்தை

**தாக்கல் செய்ய எனக்கு உரிமையில்லையென்றாலும், விற்பனை வரி அதிகாரிதான் தாக்கல் செய்ய இயலும் என்றாலும் சரியல்ல.**

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.